<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,</u>

**முன்னிலை : திரு.R.நரசிம்மமூர்த்தி,எல்.எல்.பி.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் நாள் திங்கள்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.230/2017</u>**

உ.கோமதிபாண்டியன் ----- வாதி

//எதிர்//

1. குருலட்சுமி
2. கருத்தப்பாண்டியன்
3. கோமதி ----- பிரதிவாதிகள்

இவ்வழக்கானது, இந்நீதிமன்றத்தின் முன்னர் இன்று 17.03.2025 வா.சா.1 குறுக்கு விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.F.X.யூஜின் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.அருணாச்சலம் அவர்கள் ஆஜராகியும், வா.சா.1 தோன்றுதலுக்காகப் போதிய கால அவகாசம் கொடுத்தும், வா.சா.1 ஐ அழைத்தும் ஆஜராகாத காரணத்தால், இன்று இவ்வழக்கில் இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்.

<u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது, வழக்குரை 1ம் தபசில் சொத்து வாதிக்குப் பாத்தியப்பட்டதென பிரதிவாதிகளுக்கு எதிரில் விளம்புகை செய்வதன் மூலம், வழக்குரை 1ம் தபசில் சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ, வேலையாட்களோ அல்லது வாரிசுகளோ யாதொரு வகையிலும், எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென மேற்படியார்கள் பேரில் ஒரு நிரந்தர ஏவுகட்டளை உத்தரவு பிறப்பிக்கும்படியாகவும், வழக்குரை 2ம் தபசில் பொதுநடைபாதையானது புழக்க உரிமையின்படி உபயவாதிகளுக்குப் பாத்தியப்பட்டதென விளம்புகை செய்வதன் மூலம் வழக்குரை 2ம் தபசில் பொதுநடைபாதையை வாதி புழக்க உரிமையின்படி சென்றுபோய் பொதுவாக அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ, வேலையாட்களோ அல்லது வாரிசுகளோ யாதொரு வகையிலும், எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென மேற்படியார்கள் பேரில் ஒரு நிரந்தர ஏவுகட்டளை உத்தரவு பிறப்பிக்கும்படியாகவும் மற்றும் வழக்கின் செலவுத்தொகை வாதிக்கு, பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கும்படியாகவும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**Pw1 not present. Already sufficient time granted. But Pw1 continuously absent. Hence this suit is dismissed for default. No cost.**

2025-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17-ஆம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

**(Sd.)xxxxxxxxx**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>வாதி தரப்பு சாட்சிகள் :</u>**

வா.சா.ஆ.1 மாரியம்மாள் ( வாதியின் மனைவி )

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| வ.எண் | ஆவண எண் | வாதி தரப்பு சாட்சிய சான்றவாணங்கள் |
|---|---|---|
| 1. | வா.சா.ஆ.1 | 28.09.2004 தேதியிட்ட வாதி 1ம் தபசில் சொத்தை கிரையம் பெற்ற கிரைய ஆவணம் அசல். |
| 2. | வா.சா.ஆ.2 | தபசில் சொத்துக்களைப் பொறுத்து வாதியின் பெயரிலுள்ள கூட்டுப்பட்டா எண்.5344 கணிணி நகல். |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்</u>** :– இல்லை.

**(Sd.)xxxxxxxxx**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ.நீ., சங்கரன்கோவில்.
O.S.No.230/2017.
தீர்ப்புரை (வரைவு / நேரிய)
நாள் : 17.03.2025.